Register as a N paper eylon
P. M. G. No. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ...

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:— சுபானு வருஷ புரட்டாதிமீ கக௳ (1943 செப்டம்பர்மீ 27 திங்கட்கிழமை) [இல. ௬அ

## 50 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன

### வயாவிளானில் நிகழ்ந்த பூசலில் ஒருவர் மாண்டார் பலர் காயமுற்றனர்

சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் வயாவிளான்-பலாலிச் சம்பவத்தின் பலனாக, (அந்நாலைந்து ஒரு மாதை ஒருகூட்டத்தவராகிய தொழிலாளிகள் மானபங்கஞ்செய்ய எத்தனித்ததன் பலனாக) அவ்வூர்வாசிகளுக்குந் தொழிலாளர்களுக்குமிடையே கலகம் ஏற்பட்டது.

தொழிலாளர் பெருந்திரளாக அவ்வெல்லைக்குட் புகுந்து ஓலையால் வேயப்பெற்ற ஏறக்குறைய 50 வீடுகளை எரித்தனராம். சீலைகள், தானியங்கள், நகைகள், விலையுயர்ந்த பொருட்களுட்பட அவ்வீடுகளுக்குச் சொந்தமானவர்களின் ஒரு லக்ஷம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமடைந்தன என்று கூறப்படுகிறது.

இந்தப் பூசலில், அவ்வூர் வாசியாகிய ஒருவர் தடிகளால் மோதப்பட்டுப் பலத்த காயமடைந்தனர். அவர் ஆபத்தான நிலைமையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அடுத்தநாட் காலையிற் கொண்டு போகப்பட்டார். ஒரு மாது உட்பட அவ்வூரைச் சேர்ந்த மொத்தம் பதினமர் வெள்ளிக்கிழமை இரவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனர். ஏறக்குறைய 6 வேலையாட்களுங் காயமுற்றனர் எனக் கூறப்படுகிறது.

ஒரு பத்திரிகை நிருபர் அவ்விடத்துக்குச் சனிக்கிழமை காலையிற் சென்றபோது, 12 வீடுகள் அப்போதும் எரிந்துகொண்டிருந்தனவாம். அன்றியும் வயாவிளான் சந்தியில் காரச்சில் நின்ற கார் ஒன்றும் எரிக்கப்பட்டிருந்ததை அவர் கண்டாராம்.

நெருப்பணைக்கும் பிரதம உத்தியோகஸ்தராகிய திரு. W. F. இரத்தினகோபால் நெருப்பணைப்பதற்குரிய உடைகளோடு அவ்விடத்திற்கு ஓடிச் சென்றும் கிணறுகள் மிக ஆழமாயிருந்தமையால், எரியும் வீடுகளை அணைப்பதிற் சித்தியடையவில்லையாம். மிஸ்டர் M. J. மாணிக், உதவிப்பொலீஸ் சுப்பிரிண்டெண்ட் மிஸ்டர். சேனவிரத்ன, மாகாணத்தலைவர் மிஸ்டர். R. M. டேவிஸ் ஆகியோர் சனிக்கிழமை காலை அவ்விடத்துக்குச் சென்றனர். சனிக்கிழமை மிஸ்டர். சேனவிரத்ன சுன்னாகம் பொலீஸைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ரூபனோடு அவ்விடத்திலே நின்றனர்.

வெள்ளிக்கிழமை இரவு அவ்விடத்தைச் சேர்ந்த பெண்களெல்லாந் திகிலுற்றவர்களாய், குரும்பசிட்டி கட்டுவன், அச்சுவேலி முதலிய இடங்களுக்கு ஓடிவிட்டனர். ஆண்கள், கோவில்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் ஒளித்துக்கொண்டனர்.

காயமுற்றவர்களில் ஒருவராகிய சின்னத்தம்பி செல்லத்துரையின் வாய்ப்பிறப்பைக் கேட்பதற்காக, யாழ்ப்பாணம் பொலீஸ் நீதிபதி திரு. V. மாணிக்கவாசகர் அவ்விடத்திற்கு மோட்டாரிற் சென்றார்.

இவர் ஆஸ்பத்திரியில் மரணமுற்றார் என அறிகின்றோம். இக்கலகம் பற்றிய விசாரணைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

## குன்று அரண்களைப் பாதுகாப்பதற்காக நாஜியர் பலமாகப் போராடுகின்றனர்

லண்டன் செப் 23—

அல்ஜியேர்ஸிலுள்ள நேசதேச ரேடியோ இன்றிரவு பின்வருமாறு கூறுகிறது:—"நேசதேசப் படைகள் நேப்பிள்ஸுக்குக் கண்ணுக்கெட்டும் தூரத்தில் வந்துவிட்டன வென்று யுத்த அரங்கத்திலிருந்து இன்றிரவு செய்தி கிடைத்திருக்கிறது.

யுத்த அரங்கம் முழுவதிலும் ஜர்தாவதுசேனை உக்கிரமான பீரங்கிப் பிரயோகம் செய்துகொண்டு முன்னேறியிருக்கிறது. ஸலேர்னோவுக்கு வடக்கேயிருக்கும் குன்று அரண்களைப் பாதுகாப்பதற்காக ஜெர்மானியர் பலமாகப் போராடிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலைமை ஜெர்மானியருக்குச் சாதகமாகவே இருக்கிறது. இன்று அதிகாலை 3 மணிக்கு நேப்பிள்ஸுக்கான போராட்டம் மும்முரமாக நடந்தது. ஸலேர்னோ அரங்கத்திலிருந்த சத்துருத் தளங்கள்மீது 5-வது சேனை மிடுக்காகக் குண்டுப்பிரயோகஞ் செய்தது.

தரைப்படைகளோடு சேர்ந்து யுத்தக் கப்பல்களும் நேப்பிள்ஸ் மீது குண்டுப் பிரயோகஞ் செய்தன. நேப்பிள்ஸ் சமவெளிக்கும் 5-வது சேனைக்கும் இடையிலுள்ள மலைச்சாரல்களிற் பிரமாண்டமான நெருப்பு மூண்டுவிட்டது.

## நகரசபையில் தமிழ், சிங்களம் பேசலாம்

### சட்டக் கொமிற்றியின் சிபார்சு

இப்போதிருக்கும் கொழும்பு நகரசபையின் ஆயுள் அடுத்த டிஸம்பர் மாதத்தோடு முடிவடைய இருக்கிறது. இப்போது, சட்டக் கொமிற்றி சமர்ப்பித்துள்ள ஒரு சிபார்சு நகரசபையால் நடைக்குக் கொண்டுவரப்படுமாயின், அடுத்த நகரசபைக்கு அங்கத்தவர்களாகச் செல்லும் எவரும், தமிழிலோ அல்லது சிங்களத்திலோ பேசலாம்!

நகரசபை உபவிதிகளில் திருத்தஞ்செய்வதற்காகவேண்டிச் சட்டக் கொமிற்றியிடம் சில ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த ஆலோசனைகளைச் சட்டக்கொமிற்றி கடந்த மூன்று வருடங்களாகப் பரிசீலனை செய்து சில சிபார்சுகளை வெளியிட்டிருக்கின்றது.

நகரசபையின் வேலைகள் சம்பந்தமான ஒரு சிபார்சும் இந்தச் சிபார்சுகளில் அடங்கியிருக்கின்றது. நகரசபைத் தீர்மானங்களை ரத்துச் செய்யும் உரிமை சம்பந்தமான ஒரு சிபார்சும் சட்டக் கொமிற்றியால் செய்யப்பட்டிருக்கின்றது. சட்டக் கொமிற்றியின் சிபார்சுகள் அங்கீகரிக்கப்படுமாயின், நகரசபை ஸ்தானத்துக்கு ஆங்கிலம் தெரியாதவர்களும் போட்டியிட முன்வர இடமிருக்கின்றது.

## வீட்டுக்கு நெருப்பு வைத்ததாக வழக்கு

### ரூபா 1000 நஷ்டமாம்

மல்லாகம் பொலீஸ் கோட்டில் நீதிபதி மிஸ்டர், குணம் ஸ்பென்ஸரின் முன்பாக, இணுவில் வைத்தியர் திரு. அம்பலவாணர் வைரவிப்பிள்ளை என்பவர்மீது இணுவில் வாசியாகிய சுப்பையா சின்னத்துரை என்பவருக்குச் சொந்தமாகிய வீட்டுக்குச் சென்ற ஆனிமீ 8-ந் திகதி பகலில், நெருப்பை வைத்துக் கொளுத்தியதாகவும், அச்செயலினால் அவருக்கு ரூ. 1000 நஷ்டம் உண்டாக்கியதாகவும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. டீ. ரூபன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு இம்மாதம் 21-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது இணுவில் வாசியாகிய விசுவலிங்கம் மனைவி, அன்னமுத்து கூறிய சாக்ஷியத்தின் சாரம் வருமாறு:-

'சென்ற 8-6-43ந் திகதி பகல் மத்தியானம் 12 மணியளவில் நான் எனது வளவின் பிற்பக்கத்திற்குப் போவதற்காக எழுந்து சென்றேன். அப்போது இந்த எதிரியை அங்குக் கண்டேன். அடுத்த வளவிலுள்ள சின்னத்துரையின் வீட்டு விறாந்தையின் தாழ்வாரத்தில் நின்றார். என்னைக் கண்டதும், மிகவும் வேகமாக ஓடினார். அவன் போன சிறிது நேரத்தின் பின், வீடு தீப்பற்றி எரிந்தது. நான் உடனே 'வீடு எரிகிறது' என்று உரத்துக் குளறினேன். எனது சத்தத்தைக் கேட்ட அயலவர்களும் சின்னத்துரையும் வந்தார்கள். எல்லோருமாக அயலிலேயுள்ள கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து ஊற்றி நெருப்பை அணைத்தார்கள். அவ்வீட்டினுள்ளிருந்த புகையிலை, சேலைகள், காசு முதலியவைகள் எரிந்தமையினால், 1000 ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கும்' அப்பால் வேறுசில சாக்ஷிகளை விசாரணை செய்ததின் மேல், நீதிபதி வழக்கை டிஸ்திரிக் கோட்டுக்குப் பாரப்படுத்தினார்.

## 'தமிழ்மொழி இந்தியாவின் பொது மொழியாகுக'

### மறைமலையடிகளின் முழக்கம்

சிதம்பரம் செப் 20—

அண்ணாமலைச் சர்வகலாசாலைக் கழகத் தமிழ்ப்பேரவை, தமிழிலக்கியமன்றம் ஆகியவற்றின் சார்பில் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பல்லாவரம் பொது நிலைக் கழகத் தலைவர் மறைமலையடிகள் 16-ந் தேதி மாலை சொற்பொழிவாற்றினார்.

மறைமலையடிகள் பேசும்போது பழங்காலத் தமிழர்களின் சிறப்பு அவர்கள் இயற்றிய நூல்களின் பெருமை ஆகியவைபற்றியும் தமிழ் மொழியை ஆக்கியாவுக்கே பொது மொழியாக்கவேண்டும் என்பது பற்றியும் கூறினார்.

## யாழ்ப்பாண மக்களின் கஷ்டமான நிலைமை

### புகையிலை வெற்றிலை விலைகள் கட்டுப்படுத்தப் பட்டதன் விளைவு

புகையிலைவிலையைக் கட்டுப்படுத்தியதன் பலனாக, யாழ்ப்பாண மக்களுக்கு அதிக கஷ்டமேற்படுமென்று திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் சமீபத்தில் அரசாங்கசபையில தெரிவித்தார். புகையிலை விலையை நிர்ணயிக்கும்போது புகையிலை வியாபாரிகளாவது அல்லது புகையிலை உற்பத்தி செய்பவர்களாவது கலந்து ஆலோசிக்கப்படவில்லையென்று இப்பிரதிநிதி குறிப்பிட்டார்.

வெற்றிலை விலையைக் கட்டுப்படுத்தியிருப்பதை மிஸ்டர் ஜே ஆர். ஜெயவர்த்தன கண்டித்தார். உணவுக் கட்டுப்பாட்டதிகாரி வெற்றிலையை ஓர் உணவாகக் கருதுகிறாரா வென்று இவர் வினவினார்.

கருவாட்டின் விலையைக் கட்டுப்படுத்தியிருப்பதன் பலனாக அநேகருக்குக் கஷ்டமேற்பட்டிருப்பதாக மன்னார்த் தொகுதியின் புதியபிரதிநிதி திரு. ஜே. ஐ. ஞானமுத்து கூறினார்.

## நீதிபதியின் கார் "ரயர்" களவு

கண்டி, செப் 24

கண்டி நீதிபதி திரு. ஐவர் டி. சேரம் தமது காரின் "ரய"ரொன்று களவு போய்விட்டதாகப் பொலிஸாருக்கு அறிவித்திருக்கிறார். காணாமற்போனரயர் சொற்பகாலம் மட்டும் உபயோகிக்கப்பட்டது. அது காரின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதைத் திருடியவர் அதுமாட்டியிருந்த இடத்தில் மற்றோர் பழைய உபயோகமற்ற ரயரை வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

## கோவில் வட்டாரத்திற்கு அபேட்சகர்

நிகழும் 1943-ம் ஆண்டு மார்கழிமீ நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணப் பட்டினசபைத் தேர்தலில் "கோவில் வட்டாரம் என்னும் பிரிவிற்குத் திரு. வை. சி. சி. குமாரசுவாமி B. A. (பிறக்றரும் நொத்தாரிசும்) அவர்கள் ஓர் அபேட்சகராக முன்வருவாரென அறிகின்றோம்.

## லொறிவிபத்தில் 7 வயதுச் சிறுமியின் மரணம்

நீர்கொழும்பைச் சேர்ந்த டி. அமெலின் பெரேரா என்னும் 7 வயதுச் சிறுமி சென்ற வியாழக்கிழமை பிற்பகல் கொழும்பு—நீர்கொழும்பு வீதியில் 21-வது மைலக்கல்லுக்குச் சமீபத்தில் ஓர் மோட்டார் லொறியால் மோதி விழுத்தப்பட்டதன் விளைவாகப் பலத்த காயமடைந்தாள். அவளுக்கு ஸ்தலத்திலேயே மரணமேற்பட்டது.

நீர்கொழும்புப் பொலிஸ்நீதிபதி நிலைபத்துக்கு விஜயஞ்செய்து விசாரணை நடத்தினார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஸ்
புரட்டாதிமீ ௧௧௨ திங்கட்கிழமை

## யப்பானிய மந்திரியின் பேச்சு

யப்பானிய சேனைத்தலைவரும் பிரதான மந்திரியுமாகிய ரோஜோ இற்றைக்குச் சில தினங்கட்குமுன்னர்த்தாங்கள் செய்யும் யுத்த விஷயமாகச் சில வெளியிட்டுள்ளார்; அவற்றுட் பிரதானமாயுள்ள சில யப்பானியருடைய யுத்த முயற்சி எப்படிப்பட்டதென்பதும் அவர்கள் கொண்டுள்ள நோக்கம் எவையென்பதும் ஒரு அளவிற்கு எடுத்துக் காட்டத்தக்கன. ரோஜோ கூறியவை முழுவதும் தமது சைநியங்களுக்கே ஊக்கத்தையளிக்கும்படி கூறியவாதலால் அவற்றைக்கொண்டு யப்பானியருடைய யுத்தமுயற்சி ஊக்கக்குறைவு யப்பானியரின் படைவலியின்மை முதலியவற்றை உள்ளபடி யறிதலாகுமென நாம் எண்ணிக்கொள்ளவொண்ணாது.

"எங்கள் சொந்த நாட்டிலும் எங்களுக்குரிய ஏனையநாடுகளிலும் இப்பொழுது நடைபெற்றுவரும் யுத்தம் இப்பொழுது கோரமான நிலையையடைந்திருக்கின்றதென்பதையும், இந்த யுத்தம் பல கஷ்டநஷ்டங்களோடு கூடியதென்பதையும் யப்பானிய மக்களாகிய நீங்களெல்லோரும் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; நமது சாதியினரெல்லோரும் யுத்த உபகரணங்களை மேலும் மேலும் ஆக்குவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருத்தல் வேண்டும்; உணவுப் பொருள்களை மேன்மேலும் விருத்திசெய்தல் வேண்டும். எங்கள் ஆகாயப் படையை இன்னுமதிகமாக விருத்தி செய்தல் வேண்டும்; யப்பானிய ஆடவர்களெல்லோரும் யுத்த வீரர்களாகச் சேர்தற்கு ஆயத்தமாக இருத்தல்வேண்டும்; பெண்களுள்ளும் அநேக தொகையினர் யுத்தத்திற்கு உதவியான தொழில்களைச் செய்தல் வேண்டும்; எங்கள் நாடுகளிலே கைத்தொழில் செய்யப்படுந் தானங்களில் பகைவருக்குரிய ஆகாயப் படைகள் பறந்து வந்து சேதஞ்செய்யாவண்ணம் தடுப்பதற்கான போதிய பாதுகாப்புகளை நாம் தேடிக்கொள்ளுதல் வேண்டும்" ஆனவைகளே ரோஜோ பேசிய பேச்சிற் பிரதானமானவை.

யப்பானிய மந்திரியின் பேச்சைக்கேட்ட பிருத்தானிய பத்திரிகையாசிரியர்களாயுள்ளார் சிலர், யப்பானியர் யுத்தத்திலே சோர்வடைகின்றனரென்னுங் கருத்தமையவுரைகின்றனர். ஆனாற் சில பத்திரிகைகள் யப்பான் மந்திரியின் சொல்லில் நம்பிக்கை வைக்கவொண்ணாதென்றும், ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் யப்பானியருடைய விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டுமென்றுங் கூறுகின்றன; யப்பானிய சாதிக்குரிய பேரபிமானத்தை இலகுவிற் சிதைத்தல் முடியாதென்றும், அப்படிச் சிதைத்து அச்சாதியைத் தோல்வியுறச் செய்தாலொழிய கிழக்குத் தேசத்திலும் மேற்குத் தேசத்திலும் சமாதானம் ஏற்படப்போவதில்லையென்றும் "டெயிலிஸ்கெற்ஸ்" என்னும் பத்திரிகை கூறுகின்றது.

யப்பானிய பிரதம மந்திரியாகிய ரோஜோ, மிஸ்றர். ஸேர்ஜில் றூஸ்வெல்ற், ஹிட்லர், ஸ்ராலின் முதலியோர் பேசுவதுபோல் பலமுறையும் பேசுவதில்லை; ரோஜோ அரிதிற் பேசும்போதும் அதிகம் பேசுவதில்லை; இப்பொழுது பேசுதற்குமுந்தி இற்றைக்குப் பலமாசங்கட்குமுன் ரோஜோ பேசியபோது "இந்த யுத்தத்தை நீடிக்க விடமுடியாது; இந்த 1943–ம் ஆண்டிலேயே முடித்துவிடுதல் வேண்டுமெனக் கூறினர்; அப்படி அப்பொழுது சொன்ன ரோஜோ இப்பொழுது இப்படிப் பேசியதை நாம் உற்று ஆராயுமிடத்து, ஐக்கிய தத்துவ ராச்சியத்தார் இப்பொழுது சில மாசங்களாகப் பெற்றுவரும் வெற்றிப்பாடும், இவர்களுடைய சைநிய பெலமும் யப்பானியரையும் யோசிக்கச்செய்கின்றன, பயப்படச் செய்கின்றன என்பவற்றை மாத்திரம் நாம் யூகித்தறியலாகுமேயல்லாமல், யப்பானியர் போருக்குப் பயப்படுகிறார்கள், படைவலிமை குன்றிவிட்டார்கள், யுத்த ஊக்கத்திற் குறைந்துபோனார்கள், சோர்வடைந்துவிட்டார்களென்று நாங்களாக எங்கள் அரசினராக எவ்வாற்றானும் மகிழ்ச்சியடைதற்கு இடமில்லையாகும். யப்பானியர், பதுங்கியிருந்துவிட்டுப் புலிபோற்பாய்ந்து இரையைஅகப்படுத்துஞ் சாதியினர்; அல்லாமலும் தம்நாட்டின் பொருட்டும் தமசாதியின் பொருட்டும் உயிரைத் திரணமாக மதித்துத் தியாகஞ் செய்யும் பேரபிமானமுடைய சாதியார்கள்.

## பொதுவுடமைவாதிகளாற் சீன அரசாங்கத்துக்குத் கஷ்டம்

கங்கிங் செப் 23—

சீன அரசாங்கத்தின ஆயுததாரித்த படைகளைச் சீனப் பொதுவுடைமை வாதிகள் இடையிடையே தாக்கி வருவதாகவும் இதனால், சீன அரசாங்கத்தின் யுத்த முயற்சி பாதிக்கட்படுவதாகவும் சீனத் தகவல் இலாகா மந்திரி இன்று தெரிவித்தார்.

# அரசாங்கசபைப் பேச்சு

## பெண்களுடைய மானத்தைப் பாதுகாக்க வேண்டும்

சென்றவாரம் கூடிய இலங்கை அரசாங்கசபைக் கூட்டத்தில், களனியாப் பகுதிப் பிரதிநிதியாகிய மிஸ்ரர். J R ஜயவர்த்தன பின்வரும் நிர்ணயத்தைப் பிரேரித்தனர்:—

"இங்குள்ள சக்கிராதிபத்தியப்படைவீரருட் சிலர் தங்கள் அடாதநடையினால் கிறிகத்கொடா என்னுங் கிராமத்தில் வசித்த ஊரவர் மூவர்மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தமையினால், குறித்த படைப் பகுதியார் இனிமேலாயினும் இப்படிப்பட்ட செயலைச் செய்யவொட்டாது தடுத்தற்கும், அனுவசியகமாக அப்படைவீரர் துப்பாக்கி முதலிய ஆயுதங்களைக்கொண்டு ஊருள் திரியவொட்டாது தடுத்தற்கும் ஆக வேண்டிய கருமங்களை உடனுக்குடன் செய்து வைக்கும்படி இலங்கைப் பிரதான காரியதரிசியையும் உள்நாட்டு மந்திரியையும் இச்சபை கேட்கின்றது; மேலும் குறித்த அநர்த்தம் சம்பந்தமான சாதனங்களை இக்கூட்டத்திலே சமர்ப்பிக்கும்படியும் இச்சபை கேட்கின்றது.

இந்தப் பிரேரணை விஷயமாக, மிஸ்ரர். ஜயவர்த்தன பின்வருமாறு பேசியுள்ளார்:—

"இப்பிரேரணையை நான் இங்கே எடுத்தாளவேண்டியமைக்குக் காரணம், குறித்த அநர்த்தம் எனது பிரதிநிதித்துவத்திற்கு உட்பட்ட கிராமத்திலேயே சில தினங்கட்கு முந்தி நேர்ந்தது; சைநியத்தைச் சேர்ந்தவர் சிலர் அக்கிராமத்திலுள்ள இரு பெண்களையும் ஒரு ஆடவனையுந் தாக்கினார்கள்; அவர்கள் மூவரும் இப்பொழுது வைத்தியசாலையிற் கிடக்கிறார்கள். இப்படியான அடாத செயல்களைக் குறித்த படைப் பகுதியார் இதற்கு முன்னருஞ் சில சந்தர்ப்பத்திற் செய்துள்ளார்கள்; கூடாரமடித்திருக்கும் சில போர்வீரர் பெண்களின் கற்புக்குப் பங்கஞ்செய்ய முயன்றார்களென இற்றைக்கு இரண்டு மாசங்கட்கு முந்தியும் எனக்கு முறைப்பாடுகள் வந்தன. இவை மாத்திரமல்லாமல் கிழ் ஆபிரிக்காவிலிருந்து வந்த பட்டாளத்தைச் சேர்ந்தவர் சிலர் ஆங்காங்குள்ள வீடுகள்தோறும் புகுந்து தங்களுக்குக் குடிவகையும் பெண்ணும் வேணுமென்று கேட்கிறார்களாம்.

குறித்த கிராமத்திலுள்ள தக்கார் சிலரையுங் கூட்டிக்கொண்டு நான் தேசாதிபதியைக் கண்டு முறையிட விரும்பியபோது, தேசாதிபதி தாம் இந்த விஷயத்திலே தலையிட முடியாதென்றும் உள்நாட்டு மந்திரிக்கு இதனை விண்ணப்பிக்கலாமென்றும் எமக்குத் தெரிவித்துள்ளார்; எங்கள் தேசாதிபதியினால் இப்பட்டாளத்தினரின் அக்கிரமத்தைத் தடுத்தல் இயலாதாயினும், அவர் தமமுடைய பதவியிலிருந்து விலகிக்கொண்டு தமது ஊருக்கு மீண்டுபோகவேண்டியதே முறையாகும் சக்கராதிபத்தியத்திற்குரிய சைநியத்தவர் இங்கே இப்படியான கலகங்களை விளைக்கத் தலைப்பட்டால், இங்குள்ள மக்களும் தாங்கள் சாதனவிதமான எதிர்ப்பையோ அல்லாத எதிர்ப்பையோ தொடங்கவேண்டி நேரும். இந்த நாட்டைப் பாதுகாக்கவென வந்த படைகளுப் பொறுப்பாளர்களே, குறித்த சைநியத்தவர் பொருத்தமையாக வரையாகவே நடந்துகொள்ளச் செய்தல் வேண்டும்.

பிரதான காரியதரிசியான மிஸ்ரர். R. H. டிறேறன் அப்பொழுது சொன்னவை:—

"பட்டாளத்தினருட் சிலர்செய்த அநர்த்தங்களை எல்லாரும் கண்டிக்கின்றார்கள்; இந்த விஷயத்திலே தேசாதிபதியின் அதிகாரம் எவ்வளவென்பதைப்பற்றி நான் இங்கே எதுஞ் சொல்ல விரும்பவில்லை; ஆனால் நான் அறிந்தவரையில் களனியாப்பகுதிப் பிரதிநிதியின் வரவைத் தேசாதிபதி ஏற்றுக்கொள்வதற்கு மாறாக நிற்கமாட்டாரென்பது எனது எண்ணம். இந்த விஷயமாகப் பொலிஸ்பகுதியார் மாத்திரமல்லர், பட்டாள அதிகாரிகளும் ஊக்கத்தோடு ஆராய்ச்சிசெய்து வருகிறார்களென்பதை இச்சபையிலுள்ள அங்கத்தவர்கள் திடமாக நம்பலாம். கூடாரமிட்டு வசிக்கும் பட்டாளத்தினரிடத்துள்ள துப்பாக்கிகளுக்குரிய உபகரணங்கள் அவர்கள் கைவசமில்லாது வாங்கப்பட்டு விட்டன. ஆனதால் இப்படியான விஷயத்தில் இனிமேல அவர்கள் உபயோகித்தல் முடியாது"

### திரு. அரு. மகாதேவ:-

"குறித்த அநர்த்தம் நடந்த அன்று இரவு முற்றுப் விடிவதற்கிடையில் பொலிசர் அந்த இடத்திலே காணப்பட்டனர். இப்படியான அநர்த்தங்கள் இனிமேல நடவாதபடி மேலதிகாரிகள் செய்யக்கூடிய கருமங்களெல்லாஞ் செய்து வருகிறார்கள்"

### மிஸ்ரர். சனநாயக:-

"பட்டாளப் பகுதியாரால் விளைந்த அநர்த்தம் மிகவும் மனவருத்தப்படக்கூடியது; மேலும் பாரதூரமானது; பொதுவாக இந்த நாட்டிற்கு வந்த போர்வீரர்கள் பெருந்தன்மையாகவே இதுகாறும் நடந்து வந்தனர்; சிலரினுஞ் சிலர் மாத்திரம் இப்படியான பிழைகளைச் செய்ய நேர்ந்தது பெரிதுங் கவலைக்கிடமானதாம்; பட்டாளப்பகுதி அதிகாரிகள் இப்படியான பிழைகள் நடக்கவேணுமென்று விட்டவர்களல்லர். ஆனாலும், இப்படியான பிழைகள் இனிமேலும் நேரவண்ணம் தேசாதிபதியும், பிரதான சேனைத்தலைவரும், மற்றைப்படைத்தலைவரும் எழுத்தில் உறுதிபண்ணித்தரல் வேண்டும். இந்நாட்டுப் பெண்களின் மானத்தைப் பாதுகாப்பதாக அவர்கள் வாக்குறுதி செய்தல் வேண்டும். இங்குள்ள மக்கள் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பயப்படுதலைக் காட்டிலும் மானபங்கத்திற்கே அதிகம் பயப்படுகிறார்கள். களனிபகுதிப் பிரதிநிதி குறித்த அநர்த்தத்தைப்பற்றி எனக்கு முறையிட்டபோது, நான் இவ் விஷயத்தை உள்நாட்டு மந்திரிக்குத் தெரிவித்து அவர்மூலமாகத் தேசாதிபதிக்கேனும் பிரதான காரியதரிசிக்கேனும் தெரிவிக்கும்படி சொல்லியிருந்தேன். ஆனால் அந்த விஷயத்திலே களனிபகுதி நிதி காத்திருந்தபடி நடவாமற் போய்விட்டது. தேசாதிபதி அந்த விஷயத்தைத் தாம் பார்ப்பதற்கு அதிகாரமிருந்தும் பிரியமிருந்தும் தாம் செய்யாமல் உள்நாட்டு மந்திரியிடத்தும் பிரதான காரியதரிசியிடத்தும் களனிப்பகுதிப் பிரதிநிதியைப் போகச் சொன்னமை பெருங் கவலைக்கிடமானது. எங்கள் கட்டுப்பாட்டிற்கு அடங்காமற் சிலர் அடாதகருமஞ் செய்யத் தலைப்பட்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# எழுந்திரு! விழித்திரு!! பரத்தினைச்சாரப் பசித்திரு!!!

## விவேகாநந்தரின் வீரமுழக்கம்

(சுவாமி நடராஜானந்தா, இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு)

(முற்றொடர்)

மேனாடுகளில் திக்கு விஜயஞ் செய்தபோது அங்குள்ள மக்களின் தேசிய முன்னேற்றத்தைச் சுவாமிகள் நன்கு கவனித்தார். அவர்கள் இயற்கைச் சக்திகளைத் தம் மனோவலிமையால் கட்டுப்படுத்தி அதன்மூலம் பெரும் பொருளும் ஆயுத பலமும் பெற்றனர் என்பது உண்மையே. அதன் பயனாக வெளிக வாழ்வு சீரும் சிறப்பும் பெற்றது. ஆனால் உயிருக்கும் நாகரிகத்திற்கும் உறுதி பயக்கும் ஆத்ம ஞானம் தூயவாழ்வு என்னும் பிரதான அம்சங்கள் மேனாட்டுச் சமுதாயத்தில் எள்ளளவும் காணப்படவில்லை. தர்மத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்த நாகரிகமும் அழிந்துபோமென்பது சுவாமிகளின் துணிபு. பழைய கிரேக்க, ரோம் நாகரிகங்கள் அழிந்துபோனதற்குக் காரணம் அதுவேயாகும். ஆகையினாலே அவர்கள் பொருள், இயந்திரபலம், தற்பெருமை என்பனவற்றுக்கு அடிமைப்பட்டிருப்பதையொழித்து ஆத்ம ஞானத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமென்று சுவாமிகள் வற்புறுத்தியிருக்கின்றார். பொருளும் ஆயுத பலமும் விரும்பத்தக்கனவேயாயினும், ஏழைகளைத் தண்டிப்பதற்கும், பலயீனமான சாதியாரை அடக்கியாளுவதற்கும் பிரயோசனப்படுத்தினால் அவை நாசவேதனையை உண்டுபண்ணக்கூடிய இயந்திரங்களாக மாறிவிடுகின்றன. உலாயத சித்திகள் அற்ப இன்பத்தையே அளிக்குமென்றும், ஆத்மானுபவம் போன்றதப் பெருவாழ்வை நல்குமென்றும் அவர்களுக்குப் போதித்தார். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் இலட்சியத்தை மாற்றியமையாதிருப்பார்களானால் இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குள் நாசகாலமாற்றுக்கனைக் காணலாமென்று தீர்க்க தரிசனத்துடன் எச்சரிக்கை பண்ணினார். இவ்விஷயத்தைப் பற்றி இன்னுமொரு சந்தர்ப்பத்தில் 'ஐரோப்பா முழுவதும் ஒரு எரிமலையின் சிகரத்தில் இருக்கின்றது. அது எந்த க்ஷணமேனும் வெடித்துப் பிளக்கும்' என்று அபாய அறிக்கையிட்டார். சென்ற மகாயுத்தமும் இன்று நடக்கும் அதினும் பெரிய மகாயுத்தமும் சுவாமிகளின் அபிப்பிராயம் எவ்வளவு சரியானதென்பதை நிரூபிக்கின்றன.

மேனாட்டுத் திக்கு விஜயம் முடித்ததும் சுவாமி விவேகானந்தர் தமது மேனாட்டுச் சீடர்கள் புடைசூழத் தாயகநாடு திரும்பினார். பாரதமாதாவும், தனது மானத்தைக் காப்பாற்றி, வேதக்கொடியை உலகெலாம் நாட்டிய அருந்தவச் செல்வனை வரவேற்பதற்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் பூண்டு எழுந்தாள். நாடெலாம் மகாகோஷ்சாரணம்! வீடெலாம் பூரணகும்பம்! தெருவெல்லாம் ஜெயபேரிகை! சுவாமிகளுக்குச் சென்றவிடமெலாம் ராஜோபசாரம்! பாரத மக்களெல்லாம் தம்நாட்டின் ஆத்மிக வெற்றியை நினைந்து குதூகலமடைந்தனர். அவர்களுடைய நன்மையைத் தெரிவிப்பதற்காகச் சுவாமிகளுக்கு எதையுஞ் செய்யத் தயாராயிருப்பதாக உற்சாகங்காட்டினார்கள். அவர்களுடைய உற்சாகத்தை வலிமையாக்கொண்டு தனது தாயநாட்டின் முன்னேற்றத் திட்டத்தை நிறைவேற்றலாமெனக் கருதி, கொழும்பு முதல் அல்மோரா வரையில் பிரயாணஞ் செய்யும்பொழுது ஆங்காங்கு அவர் செய்த பிரசங்கங்களில் தமது நோக்கங்களை எடுத்துக் கூறினார். அவற்றுள் தமிழ் நாட்டில் அவர் ஆற்றிய "எனது போர்முறை" என்னும் அரிய சொற்பொழிவில் அவருடைய விடுதலைத் திட்டம் முழுவதும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. விடுதலையென்று இங்கு குறிக்கப்பட்டது ஆத்மீகவிடுதலை, மதவிடுதலை, சாதிவிடுதலை, பெண்கள் விடுதலை, ஏழைகள் விடுதலை, கலவி விடுதலை என்பனவற்றையேயாம்.

சுவாமிகள் தம்நாட்டினர் மீது பேரன்புடையவராயினும் அவர்களுடைய குற்றங் குறைகளை எடுத்துப் பட்டவர்த்தனமாகக் கூறுவதற்குச் சற்றும் அஞ்சினாரில்லை. "நீங்கள் மிலேச்சர், யவனர் என்னும் பதங்களைப் பிரயோகித்து எப்பொழுது வெளிநாட்டவர்களை ஒதுக்கித் தள்ளினீர்களோ அப்பொழுதே இந்தியா ஈனதசையையடையத் தொடங்கிற்று. சமரசத்தைப் போதிக்கும் வேதாந்தக் கொள்கைக்கு முரண்பாடான செய்கையல்லவா இது? கிணற்றுத் தவளைபோலிருக்காமல் நீங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று சன சமுதாய இயந்திரம் எப்படி இயங்குகின்றதென்பதைக் கண்ணாரப் பார்க்கவேண்டும். உங்கள் சகோதரர்களான ஏழைகள், அறிவிலிகள், தாழ்த்தப்பட்டார் என்பவர்களுக்கு அன்பாவது அநுதாபமாவது காட்டினீர்களா? அதுவுமில்லை. ஜப்பான் தேசத்துப் பெண்மணிகள் விளையாட்டுப் பொம்மைகளை ஒருகாலத்திலும் உடைத்தெறிவதில்லையாம். பொம்மையை உள்ளன்போடு நேசித்தால் அது உயிர்பெறுமென்று அவர்கள் நம்புகிறார்களாம். நம்நாட்டு மக்களும் தமது ஏழைச்சகோதர, சகோதரிகளுக்கு அன்பு பாராட்டுவாராயின், அவர்கள் உற்சாகமும் உயிரும் பெற்றுத் தேசமுன்னேற்றத்துக்கு உழைப்பதற்கு முன்வருவார்கள். சனாதர்மியென்று சிறப்பாக முன்னோரால் கூறப்பட்ட மனிதரை உங்களுடைய அடிமைகளாக்கி விட்டீர்கள். இந்து சமுதாயத்தின் பெருமைவாய்ந்த சனாதனதர்மம் அதோகதியாய் விட்டது.

நமது வேதமந்திரங்களெல்லாம் 'என்னைத் தொடாதே, என்னைத் தீண்டாதே' என்னுஞ் சுலோகங்களாக மாறிவிட்டன. கற்றறிந்த இளைஞனின் அதியுயர்ந்த இலட்சியம் ஒரு அற்ப 'கிளாக்குத்' தொழிலாகக் கருதப்படுகின்றது. சீர்திருத்தக்காரர்கள் மேனாட்டு முறைகளைப் பின்பற்றிச் சமூகசேவை செய்து வருகின்றனர். அவர்கள் மக்களின் சிறுமைகளையெடுத்துப் பறை சாற்றுகின்றார்களே யொழிய அவர்களிடத்து அநுதாபமாவது ஆறுதலாவது தரக்கூடிய எந்த முயற்சியையுங் கைக்கொள்ளுகிறார்களில்லை. தேசாபிமானிகள் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்வோர் தமது அற்ப சுகத்தையேனும் பிறருக்காகத் தியாகஞ்செய்யத் தயாராயில்லை. நமநாட்டு மக்களுக்கிடையே மிதமிஞ்சிய பொறாமையுண்டு. பெருமனமுள்ள ஒருவனை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# ஸேர். பொன். இராமநாதன் சிலை

கோட்டாஞ்சேனைக் "குமாரு" எழுதுவது

ஐயா,

அரசாங்க சபையார் ஸேர். பொன். இராமநாதன் சிலையை அரசாங்கசபைக் கூட்டத்தின் ஒருபக்கத்தே — ஏரிக்கு அண்மையில் ஸேர். பொன். அருணாசலத்தின் (தம்பியின்) சிலைக்குப் பக்கத்தே (தம்பியையும் தமையனையும் ஓர் இடத்தில்) நிலைநாட்டத் தீர்மானம் செய்ததைப் பற்றி வாசித்து மிக மிகக் கவலை கொண்டோம். இப் பெரியாரின் சிலையை—பிரதியேகமான, கூடிய பிரசித்தமான—இடத்தில் வைக்கவேண்டாகா? நம நாட்டு மக்கள் குறைந்த ஞாபக சக்தி படைத்தவர்களா—என்னும் எண்ணம் என்னை வாட்டியது.

இலங்கைக்காகச் சேவித்த பெரியாருள் ஸேர். பொன். இராமநாதன் தனிச் சிறப்பு வாய்ந்தவர். ஐம்பது ஆண்டுகளாகப் பழைய சட்டசபையிலும் புதிய அரசாங்க சபையிலும் உழைத்த வீரதீரன் இராமநாதன். சென்ற உலக யுத்தத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிகள் பிரிட்டிஷ் கப்பல்களை வேட்டையாடித் திரிந்த சமயத்தில் நமது ஈழத்தாய் பெற்ற அரும் பெரும் புதல்வன் சிங்களருக்காக லண்டன்மா நகர் சென்று—தன்னுடைய சுயநலத்துக்கல்ல—தன்னுடைய சாதிபத்தாருக்கல்ல—இந் நாட்டு மக்களாகிய பெரும்பான்மையோர் எனப் பாராட்டும் சிங்களருக்காக எத்தனை கிளர்ச்சி! எவ்வளவு ஆர்ப்பாட்டம்! எத்தகைய சொற்பொழிவுகள்—ஸேர். பொன். இராமநாதன் செய்தார்.

இக்காலத்து இளைஞர்களுட் சிலர் அன்னாரின் பெருமையை உணர்கிலர் அல்லர். இக்காலத்து முதியோர்...உணர்ந்தாலும் முன்வந்து புகட்ட வருகின்றனர் அல்லர். அயல் நாட்டுப் பெரியோர்களையும் (தமிழ் நாட்டுப் பெரியார்களையும்) அவர் தம் வாழ்க்கை வரலாறுகளையும், தமிழர்களாகிய நாம் போற்றி வருதல் மிகவும் வியக்கற்பாலதே. ஆயினும் நமது ஈழநாட்டுப் பெரியோர்களை நாம போற்றி நினைவு கூர்ந்து அவர்கள் ஞாபகத்தைச் சீரிய முறையில் நிலைநாட்டுவது முறைமையும் சிறப்புமன்றோ?

அரசாங்கசபைத் தாதாவும், பல கலைகளிலும், துறைகளிலும் நமது தலைவராக விளங்கியவரும் மேல் நாட்டாருக்கு இந்துசமயத்தையும், கீழ்நாட்டுக் கலையையும் இவை என்ன என்பதைச் சுவாமி பரமானந்தர் என்னும் புனைப்பெயருடன் அமெரிக்க தேசத்திற்குச் சென்று ஈழத்தின் புகழை நாட்டியவரும், நமது உரிமைகளுக்காகப் போராடியவரும், அரசியல் ஞானியாகத் திகழ்ந்தவருமாகிய ஸேர். பொன். இராமநாதனுடைய சிலை அரசாங்க சபைக்கு முன்பாகப் பாமரருக்கும் முன்மாதிரியாக வைக்கப்படுவதல்லாமல் ஒரு மூலைமுடுக்கில் (அரசாங்க நிர்வாகசபையாரின் தற்போதுள்ள தீர்மானப்படி) வைப்பதற்கு நாம் கை கட்டி, வாய்புதைத்து, அடி பணிந்து, ஏமாந்து கிடப்பது தகுமா? தகுமா? தமிழர் அனைவர்க்கும் (சிறுபான்மையோர் யாவருக்கும்) இது ஓர் இழுக்கன்றோ! இழுக்கன்றோ!

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரின் திருவாக்கை நினைவு கூருங்கள். நமது இலங்கை அரசியல் தாதாவாகிய ஸேர். இராமநாதனின் சிலையை வைத்தால் அரசாங்க சபைக்கு முன்பாக வைக்கவேண்டும். அன்றேல் இருந்த இடத்திலேதான் இது கிடக்கட்டும். பலஆண்டுகளாகக் கவனிக்கப்படாமல் ஓர் இருட்டறையில் ஒரு மூலையில் கிடந்துவந்த சிலையை இப்பொழுது எடுத்து—போதிய தகுதி இல்லாத இடத்தில் வைத்து—ஏன் மரியாதை குலைப்பான்? இந்த அரசாங்கசபை குலையும் வரையுமாவது இருந்த இடத்தில் கிடக்கட்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நமக்குப் புதிய அரசியல் திட்டத்தைவழங்க இருக்கின்றனர். அண்மையில் புதிய தேர்தல் நடப்பதற்குப் போலும் அரசாங்கத்தார் தெரிவாளரின் பேரேடு தயாரிக்கிறார்கள். புதிய அரசாங்க சபையார் இச்சிலைக்கு ஏற்ற பீடத்தை அளிக்கலாம்! அன்றேல் சனுசைக் கல்லால் புத்தம் புதிய சிலையொன்று அமைப்பினும் அமைத்துத் தக்க இடத்தில் நிலைநாட்டலாம்! வெண்கலச் சிலையாற்றான் அன்னார் பெருமை காட்டப்படுவதொன்றா? அவருடைய சேவை ஒவ்வொரு தேசாபிமானியின் இருதய கமலத்திலும், ஒவ்வொரு சமயாபிமானியின் உள்ளத்திலும் பதிந்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்து மருதனார் மடத்து (சுன்னாகம்) இராமநாதன் பெண்பாடசாலையைத் தாபித்த புகழ் ஒன்றே அன்னாருக்கு அமரத்துவம் அளிக்கக்கூடியது. இன்றுள்ள மங்கைகளும் மாதுசிரோன்மணிகளும் அவர்தம் காதலர்களும் கணவர்களும் சைவத்திலும் தமிழிலும் கொண்டுள்ள ஆர்வத்துக்கு அனைத்தின் கோலிய பெருமை ஸேர் பொன் இராமநாதனுக்கு உரியது. பரமேஸ்வரக் கல்லூரியை மாத்திரம் கொழும்பில "சுகஸ்தானில்" கட்டியிருந்தால்! —எனினும் அக்கல்லூரியின் பிரயோசனத்தை யார் குறைவாக மதிப்பிடுவர்?

ஸேர். பொன். இராமநாதன் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த தொண்டு பலப்பல. மாம்பழமும் பலாப்பழமும், தேனும் கலந்துள்ள பாகு எவ்வளவு தெவிட்டாத இனிமையை அளிக்குமோ—அதுபோல இனிய அருமையான தமிழ்ப் பிரசங்கங்கள் நிகழ்த்தினார். கொழும்பு விவேகானந்த சபைத் தலைவராகவும், இந்துவாலிபர் சங்கத் தலைவராகவும் —தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும் சண்டமாருதம் போலப் பிரசங்கம். அன்னாரின் பேச்சுக்களில் வீறும், வீரமும், விஷய ஆழமும் வார்த்தைச் செழிப்பும் மிளிர்ந்தன.

'ஹன்சாட்' என்னும் சட்டசபை நடவடிக்கைகளைப் படித்துப் பாருங்கள். இவர் பதிப்பித்த பகவத்கீதையைப் படித்துப் பாருங்கள். (Eastern Exposition of St. John) சந் யோன் என்னும் சுவிசேஷ நூலுக்கு இப்பெரியார் எழுதிய வியாக்கியானத்தைப் படித்துப் பாருங்கள். சட்ட கலையில் அன்னார் எழுதிய நூல்களைப் படியுங்கள்.

தமிழுக்கும், சைவத்துக்கும், ஈழத்துக்கும் இப்பெரியார் சலியாமல் உழைத்தார். கொச்சிக் கடைப் பொன்னம்பலவாணர் கோவிலைப் போய்ப் பாருங்கள். மன்னர்கள் தொடங்குவதற்கும் கூசும் திருப்பணியை இம்மாணிக்கம் போன்ற மனிதன் தொடங்கினார். ஆனால், முடிபெறவில்லை அது. சோழக் கோவில்களின் பண்பு காணப்படுகிறது இக்கோவிலில்.

ஸேர். பொன். இராமநாதன் ஒரு தீர்க்கதரிசி. டொனமூர் அரசியல் திட்டத்தின் குறைகளை—சிக்கல்களை—அவர் ஞானக் கண்ணால் உணர்ந்தார். அவர் அதை 'எட்டியும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்

(முற்றொடர்)

௩-வது மந்திரத்தின் குறிப்பு.

குறிப்பு-௧. எல்லாம் (தோன்றி) நிலைபெறுதற்கும், முடிவில் ஒடுங்குதற்கும் இடமாயுள்ளது என்றதனால்; உலகம் (தோன்றி நின்றழிதலாகிய) முத்தொழிலுடையதென்பதும், அதனை முத்தொழிற்படுத்தும் இறைவன் அதனினும் வேறாயுள்ளான் என்பதும் கருதலளவையின் வைத்துச் சாதித்தவாறு. இங்கு கூறிய ஒடுக்கம் மகாசங்கார காலத்தில் நிகழும் ஒடுக்கமாம். அச்சங்காரகாலத்தில் சங்காரத்தைச் செய்யும் முதல்வன், சித்தும் சடமுமாகிய எவற்றையும் தன்னிடத்தொடுக்கிக் கொண்டு தானொருவனே தனித்து நிற்பனாதலால், அவ்வொடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவிப்பவனும் அவனேயாதல் பெற்றாம். "ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை" என்றது சிவஞானபோதம். (௧-௨. மேற்கோள்) எனவே சங்காரகர்த்தாவாகிய சிவபெருமானே காணப்பட்ட உலகத்திற்கு நிமித்த காரணமாகிய பிரமம் (முதற் கடவுள்) என்று முதன்மந்திரத்தி லெழுந்த வினாவிற்கு விடையிறுத்தது சுருதி. "எப்போது இருள் உளதாய், பகலும் இரவும் இலதாய், சத்தும் அசத்துமிலதாய் இருந்ததோ (மகாசங்காரத்தின்பின்) அப்போது கேவலம் சிவபெருமான் ஒருவரே யிருந்தார்" (சுவே. ௪—௧௮) "சௌமிய சததாகிய இதுவே முதற்கண் புனருற்பவத்தின் முன் இருந்தது" (சாந்தோக்கியம்-௬-௨-௧)

"இருநிலனது புனலிடை மடிதர
வெரிபுக வெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளி கெட
விடனிடை முழுவதுகெட
விருவர்களுடல் பொறையொடு
திரியெழிலுருவுடையவனினமலர்
மருவிய வறுபத மிசைமுரன் மறை
வனமமர்தரு பரமனே"

ஞானசம்-தேவாரம்

"பெருங்கடன்மூடிப் பிரளயங்
கொண்டு பிரமனும்போ
யிருங்கடன் மூடியிறக்கு மிறந்தான்
களேபரமுங்
கருங்கடல் வண்ணன் களேபர மும்
கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை
நல்வீணை வாசிக்குமே"

நாவுக்-தேவாரம்

"எம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்றது புனருற்பவம் வருதலைக் குறிக்கும்.

"நுரையுந் திரையு மொப்புற கொட்பும், வரையில் சீகரவாரியுங் குரைகடற், பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவதோன்றி, வெண்ணிலவாகி யிருங்கடலடங்கும், தன்மைபோலச் சராசர மனைத்து, நின்னிடைத் தோன்றி நின்னிடை யொடுங்கும்" (பட்டணத்துப்பிள்ளை)

நிமித்த காரணனாகிய இறைவன் முதற் காரணமாகிய மாயைக்கு ஆதாரமாக மாயை ஆதேயமாய் நிற்றலின்; மாயையிற் றோன்றி யொடுங்கு முலகினை இறைவனிற் றோன்றி யொடுங்குமென்று வேத முதலிய கலைகளனைத்தும் விளம்பும். "இடத்தினிகழ் பொருளின் கட்படுவதனை இடத்தின் மேலேற்றிக் கூறுதல் அமையுமென்பது கிழங்கினின்றுந் தோன்றியதாமரையைப் பங்கயம் என்பதனானுமறிக. இவ்வியைபுடைமை சேர்க்கையன்றே "உயிரவை யொடுங்கிப் பின்னு முதிப்பதெனான்பால்" எனவும், "உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்" எனவும் வழிநூலாசிரியர் (சிவஞான சித்தியாசிரியர்) ஓதியதூஉம், உலகவனுருவிற் றோன்றி யொடுங்குபு வாதனாசமத்தின் வருதலெடுத்தோதியதூஉ மென்க" (சிவஞானபாடியம்-௧-௨) என்று சிவஞானசுவாமிகள் கூறியருளினர். இறைவன் உலகினுக்கு நிமித்தகாரணன், மாயை முதற்காரணம் என்பதற்குச் சுருதிப் பிரமாணம் சில காட்டுதும். சுவே-௪-௧௦- "மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் து மகேஸ்வரம்"- மாயையைப் பிரகிருதி (முதற்காரணம்) என்றறிக, மாயையுடையவரை மகேசுவரனென்றறிக. பிரகிருதி, முதற்காரணம், உபாதானம் என்பன ஒருபொருட்கிளவி. ஈசுவரன்-ஆளுபவன் அல்லது நடத்துபவன். அது ஈண்டு நிமித்தகாரணன் என்னுந் துணையாய் நின்றது. கடம்-௫-௧௨- 'ஏகோ வசீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம் பீஜம் பஹுதா ய: கரோதி" -எவற்றையுமடக்கி யாளுபவராயும், எவற்றிற்கும் அந்தராத்மாவாயும், ஒருவராயுமுள்ள எவர்; ஒன்றாயும், முதற்காரணமாயுமுள்ள மாயையைப் பலவாகச் செய்கின்றாரோ, முண்டகம்-௧-௧-௭ல் பிரமத்தைப் 'பூதயோநி' (எல்லாவற்றிற்கும் காரணம்) என்றுரைத்துப் பின்-எட்டாவது மந்திரத்தில் காரணமாயிருக்கு மியல்பினைப் பல உதாரணங்களால் நன்கெடுத்து விளக்கிற்று. அம்மந்திரப் பொருள் பின்வருமாறு; "சிலந்திப் பூச்சியின் உடம்பிலிருந்து நூல் வருவது போலவும், பூமியிலிருந்து மரஞ் செடி முதலியன தோன்றுதல் போலவும் உயிருள்ள மனித உடம்பிலிருந்து உரோமம் தோன்றுவது போலவும், பிரமத்திலிருந்து எல்லாம் தோற்றுகின்றன." என்பது. சிலந்திநூலுக்குச் சிலந்திப் பூச்சியினுடம்பே முதற்காரணம். அங்ஙனமே ரோமத்திற்கு மனித உடம்பு முதற்காரணம். அங்ஙனமாயினும் உயிரற்ற உடம்புகளினின்றும் அவை தோன்றுவதில்லை. அதுபோல உலகத்திற்கு மாயை முதற்காரணமாயினும், இறைவனது ஆதாரமிலவழி மாயையினின்று உலகந்தோன்றாது என்னுமுண்மையை யுணர்த்துதல் வாயிலாக, இறைவன் உலகிற்கு நிமித்த காரணனே என்பதை இவ்விரு உதாரணங்களாலும் வலியுறுத்திற்று. இனி, "நிலத்திலிருந்து மரஞ் செடி முதலாயின தோன்றுதல் போல" என்னுமுதாரணம்; மரம் செடி முதலாயின தோன்றுதற்கு நிலம் ஆதாரமாயிருப்பினும் வித்தில்வழி நிலத்திலிருந்து அவை தோன்றுவதில்லை. அங்ஙனமே உலகந் தோன்றுதற்கு நிமித்தகாரணனாகிய இறைவன் ஆதாரமாயிருப்பினும், மாயையில்வழி அவ்விறைவனிலிருந்து உலகந்தோன்றாது என்னும் உண்மையை யுணர்த்துதல் வாயிலாக உலகிற்கு முதற்காரணம் மாயையே என்பதை வலியுறுத்திற்று. இன்னும் விரிப்பிற் பெருகும். இவ்வாற்றால் வேதங்களெல்லாம், உலகிற்கு முதற்காரணம் மாயை எனவும் நிமித்த காரணம் இறைவன் எனவும் கொண்டமை தெளிக. துணைக்காரணம் பராசத்தி என்பது வேதத்தின் கருத்தாதல் மேலே காட்டப்பட்டது. பின்னும் வருமிடங்களிற் கண்டு கொள்க:

(உ) அமிசனான ஆன்மா, அவயவப் பகுப்பற்ற பிரமத்தினிடத்து அமிசங் கூறுதல் பொருந்தாதாயினும், பிரமத்தோடு கலப்பினால் ஒற்றித்து நின்று ஏகதேசமாய் விளங்கித் தோன்றுதலுமுடைமையால் ஆன்மா பிரமத்தின் அமிசம் எனப்பட்டது. வேதாந்த சூத்திரம், ௨-௩-௪௩ ல் நீலகண்டர் பாடியம் வரையுமிடத்தில் "விசேடங்கள் விசேடியத்தின் ஏகதேசமாயிருத்தல்பற்றி அமிசம் என்று கூறப்படினும் "எவர் ஆன்மாவிலிருக்கின்றாரோ" என்றற்றொடக்கத்த சுருதி (யசுர்வேதம்) கூறியவாறு சொரூபபேதத்திற்கு விரோதம் எய்தாது" என்றனர்.

அதே சூத்திரத்தில் ராமாநுஜர் "சரீரியாகிய ஆன்மாவிற்குச் சரீரம் அமிசம்" என்று உதாரணம் கூறினர். சங்கரரும், ௨-௩-௪௩ல "பிரமம் நிரவயவமாதலால் அதற்கு அமிசம் என்பது பொருந்தாது. அவயவமுடையதற்கே அமிசமுண்டு. ஆதலால் சீவன் அமிசம் என்றது அமிசம்போல என்றாய்" என்றனர். இதனால் ஆன்மா முதல்வனோடு கலப்பினால் ஒன்றுபட்டு நிற்றல் காட்டப்பட்டது.

(௩) "ஆன்மாவையும் (தன்னையும்) (தனக்கு உள் நின்று) செலுத்துபவரையும் வேறு என அறிந்து", இதனால் பொருட்டன்மையால் வேறாதலும், உள்நின்று செலுத்துதலால் உடனாதலும் காட்டப்பட்டன. எனவே, சைவசித்தாந்தத்திற்கூறிய "ஏகமாகி வேறுமுடனுமாய்" நிற்கும் சுத்தாத்துவித உண்மையே வேதங்களுக்கெல்லாம் துணிந்த பொருளாதலறிக.

## சேர். பொன். இராமநாதன் சிலை.

3-ம் பக்கத் தொடர்ச்சி

தொடேன்' என்று தீவிரமாகச் சபதம் செய்தார். அதன் விளைவுகளை நாம் நேரில் இன்று காண்கிறோம்! எல்லாம் சிங்களமான அரசியல்...... அரசினரின் பகுதிகளில் (பகிரங்கமாகத் திறமைக்காகத் தெரிவு செய்யப்பட்டும்) சிறுபான்மையோர் (இவ்வளவு தமிழர்கள்) உயர்பதவிகளை ஏன் வகுக்க வேண்டும். இந்தியர்களுக்கு நம் நாட்டுக்கு வந்து நாட்டுக்கும் இயற்கைப் பொருள் விருத்திக்காகவும் உழைத்து வரும் தமிழ் நாட்டு மக்களுக்குப் பிரஜா உரிமை வழங்கப்படாது, இன்னோரன்ன கூச்சல்கள் கேட்கப்படுகின்றன. இன்று ஸேர். பொன். இராமநாதன் இருந்தால்!! அவர் சமரச மெய்ஞ்ஞானி!

போற்றுமின்! போற்றுமின்! இவ்விழுப் பெரியாரைப் போற்றுமின்! விழிமின்! விழிமின்!! தமிழ்ச் சங்கங்கள் விழிமின்! ஈழ மக்கள் விழிமின்! நமது பெரியாருக்குச் சாலவும் ஏற்ற பீடத்தில் அரசாங்க சபைக்கு முன்பாக இராமநாதன் சிலையை அமைக்க முயற்சி செய்யுங்கள். காரியம் கை கூடும் வரையும் சலியாது உழையுங்கள்! அரசாங்க நிர்வாக சபையாரின் தீர்மானம் இழிவு தருவன! இழிவு தருவன.

## பொக்கிஷ மந்திரி காலமானார்

லண்டன் செப் 21—

பிருத்தானிய பொக்கிஷ மந்திரி ஸேர். கிங்ஸ்வூட் இன்று காலமானார். மாரடைப்பின் காரணமாக அவர் மரணமடைந்தார். அவரது லண்டன் வாசஸ்தலத்திற்றான் மரணம் சம்பவித்தது.

ஸேர். கிங்ஸ்வூட்டுக்கு வயசு 62. கொம்மன்ஸ்சபை, கோடை விடுமுறைக்குப்பிறகு இன்று கூடிய பொழுது சபைத் தலைவர் இம்மரணச்செய்தியை அறிவித்தார்.

## எழுந்திரு! விழித்திரு!! பரத்தினைச்சாரப்பசித்திரு!

3ம் பக்கத் தொடர்ச்சி

தங்களிடையே தோன்றி ஏதாவது ஒரு செயற்கருஞ் செயலில் ஈடுபடுவாராயின், அவன் அம்முயற்சியில் சித்தியடையாவண்ணம் தடுப்பதற்கு ஐம்பது பேராவது கங்கணங் கட்டிக்கொள்வர். உங்கள்மீது கொண்ட அன்பு காரணமாகவும், உங்களை நல்வழியில் திருப்புவதற்காகவும் இவற்றை உங்களுக்குக் கூறுகிறேன். நீங்கள் என்னை வெறுத்துத் தள்ளி விடினும் நீங்கள் தாழ்ந்த நிலையை அடைகின்றீர்களென்று திரும்பியும் உங்களுக்கு வந்து கூறுவேன். ஆனால் அப்பொழுதும் எனது வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காமலிருப்பீர்களாயின் நானும் உங்களோடு வந்து உட்கார்ந்துகொண்டு நீங்கள் உறங்கி நாணும் அடைவேனாக" என்று மனமுருகும்படி கூறியிருக்கின்றார்.

ஒரு வைத்தியன் நோயாளியின் குணங்களைக் கவனித்து, வியாதியென்னவென்பதை நிர்ணயித்துக் கொண்டு அதற்குத் தகுந்த சிகிச்சை செய்கின்றான். அதேபோன்று சுவாமி விவேகானந்தரும் முன்னே வியாதியைப்பற்றிக்கூறிவிட்டு அதற்குத்தகுந்த சிகிச்சையுங் கூறுகின்றார். "இந்திய சமுதாயத்திடையே காணப்படும் பிளவுகளுக்குக் காரணம் மதமே. ஆகையால் சமயங்களெல்லாவற்றிற்கும் அடிப்படையானதும், பொதுவானதுமாகிய சமரச சன்மார்க்கக் கொள்கைகளை யெடுத்துப் போதித்தல் வேண்டும். சனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், செயற்கருஞ் செயல்களைச் செய்வதற்கும் வேண்டிய அரும்பெருங் குணங்கள், ஆற்றல், மனோவலி, அஞ்சாமை, என்பனவேயாம். இவையனைத்துக்கும் சுரங்கமே போன்றிருப்பது உபநிடதங்கள்தான். மனிதனின் தெய்வத்தன்மை, சராசரங்களின் ஒருமைப்பாடு எனுங் கொள்கைகள் அஞ்சாமையையும், வீரத்தையும் அளிக்கின்றன. வேண்டியது பலம்—தேகபலம், மனோபலம், ஆத்மபலம் இவையனைத்தையும் உபநிடதச் சுரங்கங்களிலிருந்து குடைந்து பெறமுடிகொள். உலகம் முழுவதற்கும் புத்துயிரளித்து, உற்சாகமூட்டக்கூடிய பலம் அவற்றுண்டு. பெலவீனர், தாழ்த்தப்பட்டோர் அனைவரையும் வீரியவிதைப் பெறும்படி உபநிடதங்கள் அறைகூவி அழைக்கின்றன, அந்த வீரியவிதைப்பெற்று நிமிர்ந்து நின்று விடுதலைப்பெறுமின், —தேகவிடுதலை, மனோவிடுதலை, ஆத்மவிடுதலை ஒவ்வொரு தேசபக்தனும் தனது சகோதர சகோதரிகளுக்கு அவர்களுடைய உண்மைச் சுபாவத்தை விளக்கிக் காட்டல்வேண்டும். 'நான் தெய்வத்தன்மையுடையேன்! நான் தெய்வகுமாரன்! எல்லையற்ற ஆற்றல் என்னிடமுண்டு' என்னும் வேதமந்திரங்களை மக்களின் காதுகளில் சதா ஊதிக்கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது தான் உறங்கும் ஆத்மன் தனது நெடுங்கால உறக்கத்திலிருந்து விழிப்பான். அப்பொழுதுதான் ஆற்றல் வரும், பெருமை வரும், நன்மைவரும், சுத்தம் வரும்; சீரும் சிறப்பும் வருவனவெல்லாம் ஆத்ம எழுச்சியுடன் நம்மை வந்தடையும்" என்பது சுவாமிகளின் திடமான நம்பிக்கை. ஆகையினாலேதான் சுவாமிகள் உங்கள் ஒவ்வொருவரையுந் தட்டியெழுப்புவதற்காக 'எழுந்திரு! விழித்திரு!! பரத்தினைச்சாரப் பசித்திரு!!! என்ற பொன்மொழிகளில் பொறித்திருக்கிறார்.

## சீனு சமாதானஞ் செய்து கொள்ளச் சம்மதிக்காது

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் கருத்து

நியூயோர்க் செப் 19—

சீனுவிடம் ஜப்பான் சமாதானப் பேச்சுகளைத் துவக்கியிருப்பதாகச் சீனவெளிநாட்டு மந்திரி கூறியது பற்றி "நியூயோர்க் டைம்ஸ்" தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது; "பேர்ல் துறைமுகம் தாக்கப்பட்டது முதற்கொண்டே ஜப்பான் இவ்விதம் செய்து வருகின்றது. பர்மோஸா, மஞ்சுகோ ஆகியவற்றைத் தவிர ஏனைய பிரதேசங்களைக் காலி செய்துவிடுவதாக ஜப்பானியர் கூறி வருகின்றனர். சீனு நேசநாடுகளைக் காட்டிக்கொடுக்கவேண்டும் என்பதையே ஜப்பான் எதிர்பார்க்கிறது. ஜப்பானின் நிபந்தனையற்ற சரணுகதி தவிர, வேறு ஒன்றுக்கும் சீனு சம்மதியாது. இதுவரை சீனுவிடம் மட்டுமே சமாதானப் பேச்சுக் கிளம்பியிருக்கிறது. யுத்தம் தொடர்ந்து நடக்க நடக்க ஜப்பான் ஹிட்லரின் தந்திரங்களைச் சிறிது சிறிதாகப் பின்பற்றும்".

---

## விவசாய சபையைக் கலைத்துவிட வேண்டுமா?

விவசாயசபை நீடித்து நிலவிவருவதால் எவ்வித பிரயோசனமுமுண்டாமென்னும் பிரச்னை குறித்த சபையின் அங்கத்தவர் ஒருவரால் கிளப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

குறித்த அங்கத்தவர் தெரிவித்திருப்பதாவது:—

"விவசாயசபை ஓர் ஆலோசனை ஸ்தாபனமாகவே அமைக்கப்பட்டது. அரசாங்கத்தின் பொதுவான விவசாயக் கொள்கைபற்றி ஆலோசனை கூறும்பொருட்டே இச்சபை நியமிக்கப்பட்டது. ஆனால், உண்மையில் கொள்கை சம்பந்தமான பிரச்னைகள் எதுவும் சபையின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. சபை தானுக அளித்த ஆலோசனைகளும் அலட்சியஞ் செய்யப்பட்டன."

சபையின் விசேஷ கூட்டமொன்று சமீபத்தில் நடைபெறுமென்றும், அப்பொழுது சபையைக் கலைத்துவிடவேண்டுமென்ற ஆலோசனையும் மற்றும் சில விஷயங்களும் பரிசீலனை செய்யப்படுமென்றும் தெரிகிறது.

---

## வெடி மருந்துச்சாலைக் கொள்ளை வழக்கு

மாகரிர், செப், 19—

மாங்கிர் வெடிமருந்துச் சாலைக் கொள்ளை வழக்கில் இதுவரை நீதிபதி முன்பு ஐம்பது சாட்சிகளுக்கு மேல் விசாரணை செய்யப்பட்டனர். சென்றவருடக் கலகத்தின்போது பலநூறு கைவிச்சுக் குண்டுகள் களவாடப்பட்டதாகவும் எதிரிகளில் ஒருவர் கூறிய உளவால் அவற்றிற் சில கைப்பற்றப்பட்டதாகவும் வழக்குக் குறிப்பிடப்பட்டது.

---

## ஜவுளிக்கடையில் தீ விபத்து

வாலிபருக்குப் பலத்த காயம்

இரத்தினபுரி செப் 22—

முதவாகலையிலுள்ள கடையொன்று தீப்பற்றியதன் பலனுக அங்கிருந்த ஜவுளிகளும், உணவுப் பொருள்களும் தீக்கிரையாயின. குறித்த கடையிலிருந்த சிறுவனொருவன் பலத்த காயமடைந்தான்.

## அரசாங்க சபைப் பேச்சு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டபோது அதனை உடனுக்குடன் விசாரணை செய்து கண்டிப்பதை விடுத்து, தேசாதிபதி அவரிடம் போ இவரிடம்போ என்று சொல்லியிருக்க வொண்ணுது. இலங்கைப் படைத் தலைவராயிருக்கும் அதிகாரியிடத்து எனக்கு அதிக மதிப்புண்டு; ஆனால் அவர் தமக்கல்லாத விஷயங்களிலும் வந்து இடையிடையே தலையிட்டுக் கொள்ளுகின்றார்; ஆனாலும் அவரிடம் நாம் இந்த விஷயத்தைத் தெரிவித்திருந்தால் அவர் உடனுக்குடன் இந்த அநர்த்தத்திலே தலையிட்டு விசாரணை செய்து ஆகவேண்டிய கருமங்களைப் பார்த்திருப்பார். இனிமேலாயினும் நமது தேசாதிபதி இப்படியான அநர்த்தங்கள் நேருஞ் சமயத்தில், மற்றை விஷயங்களில் தமக்குள்ள அதிகாரத்தை உபயோகிப்பதுபோல இந்த விஷயத்திலும் உபயோகிப்பாரென நினைக்கிறேன்.

இந்த அரசாங்கசபையின் பிரதான மூப்பன் என்ற முறையில், இந்நாட்டிலுள்ள மக்களின் மானத்திற்கும் உயிருக்கும் யாதும் பங்கம் நேருமேல் எங்கள் காருண்ணியத் தங்கிய அரச சக்கரவர்த்தியின் பிரதிநிதியாயுள்ளவர்க்கு அக்குறைகளை உடனுக்குடன் எடுத்து வெளியிட்டு ஆகவேண்டியவற்றைச் செய்விதற்கு எனக்கு அதிகாரமுண்டு, நாங்கள் இப்பொழுது ஒரு பெரிய யுத்தத்தைச் செய்து வருகிறோம்; ஆனால், எங்கள மக்களின மானமும் உயிரும் பாதுகாக்கப்படுமானுறுன் நாங்கள் அந்த யுத்தத்தைக் கௌரவத்தோடு செய்தல முடியும்"

### நாமுல்லாப் பகுதிப் பிரதிநிதி மிஸ்ரர். சமரக்கோடி

"இந்த விஷயத்திலே தேசாதிபதி செய்த செய்கையும் பராமுகமும் நாங்கள் அவரைத் தம் பதவியை விட்டு ஊருக்கு மீண்டு போகும்படி கேட்பதற்குப் போதிய ஏதுவாகும்"

### சபைத்தலைவர்:-

"தேசாதிபதியின் செயலைப்பற்றி இன்னமும் இங்கே எடுத்துப் பேசுதல முறையல்ல"

### மிஸ்ரர். சமரக்கோடி

அரசியல் முறையமைப்பிற்குட்பட்ட தேசாதிபதி தமது மந்திரிமாரின் புத்திகேட்டு நடவாதபட்சத்து அவர் தம் பதவியை விடுத்து ஊருக்கு மீண்டுபோதல நலலதென ஆனை நினைக்கிறேன்; மேலும் இலங்கைப் பிரதான படைத்தலைவர் இலலையேல் வேறு யாரும தலைமையதிகாரிகள் இந்த விஷயத்திலே தலையிடுதல் வேண்டும்."

### பிரதான காரியதரிசி

களனியாப் பகுதிப் பிரதிநிதியைச் சந்தப்பதற்குத் தேசாதிபதிக்கு விருப்பந்தான்; ஆனல், குறித்த அநர்த்தத்தைப்பற்றிய விபரங்கள தேசாதிபதிக்குத் தெரியாது. அவ்விபரங்களை உணவூட்டு மந்திரிமூலமாகவேனும பிரதான காரியதரிசிமூலமாகவேனும தேசாதிபதி அறிந்துகொள்ளுதல் முடியும.

### மிஸ்ரர். ஜயவர்த்தன

"உணவூட்டு மந்திரியும், பிரதான காரியதரிசியும் மேற்படி அநர்த்த விஷயமாகச் சிரத்தை பூண்டுள்ளனவென்பது எனக்குச் சந்தோஷம்; ஆனல் தேசாதிபதியை நான் பேசியதான வேண்டிய அவசியமில்லை"

மேற்படி கிர்ணயம் குறித்தசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## ஸ்ரீ விபுலானந்த அடிகளுக்குப் பாராட்டு விழா

கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீ. விபுலானந்த அடிகள் தமிழுலகத்திற்குப் பல துறைகளிலுமாக இயற்றிய தொண்டுகளை நினைவுகூர்ந்து பாராட்டுவதற்காக, கொழும்பு நகரசபை மண்டபத்தில், சென்ற (15-9-43) புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் ஒரு மாபெருங்கூட்டம் கூடிற்று. மந்திரிமார், பேராசிரியர்மார், வித்தியாதரிசிகள் உட்பட ஆயிரத்துக்கதிகமான தமிழன்பர்கள் சமூகமாயிருந்தனர். முதலில் தமிழ்ப்பெண்கள் சிலர் கூடிச் சங்கீத விருந்தளித்தார்கள். உள்நாட்டு மந்திரி கௌரவ A. மகாதேவா அவர்கள் தலைமை வகிக்கக் கூட்டம் ஆரம்பமாயிற்று.

தலைவரவர்கள் தமது தலைமைப்பேருரையில், சுவாமிகளுடைய கல்வியறிவின் சிறப்பினையும் அவர்கள் தமிழுலகத்திற்குச் செய்த பலவாய தொண்டுகளையும் எடுத்துக் காட்டினுர்கள். ஒரு ஆசிரியனுக்கு அமையவேண்டியனவாகக் கூறப்படுங் குணங்கள் இன்னின்ன என எடுத்துக்காட்டி அவையாவும் சுவாமிகளிடத்தமைந்தனவேயெனத் தெளிவாக விளக்கிக் காட்டினுர்கள்.

டக்றர். ஐவார். ஜென்னிங்ஸ் அவர்கள் பேசுகையில் "சிற்சில வேளைகளில் சர்வகலாசாலையார் சரியான காரியங்களைச் செய்துவிடுவதுமுண்டு" என்று நகைச்சுவை ததும்பக்கூறிப் பல்கலைக்கழகத்திற்கு ஆக்கந் தருவதற்குச் சுவாமிகள் வரவு நல்வரவாகுக என்ருர்கள். சுவாமிகளின் கல்வியறிவு அநுபவமெல்லாம சேர்ந்து வருங்கால உலகிற்கு எங்ஙனம் உதவியளிப்பதாயிருக்கின்றதென்பதை விளக்கிக் காட்டினுர்கள். வறிய பிள்ளைகளின கல்விச் சகாயங்களைப்பற்றிப் பேசத்தொடங்கி, தாம்கூட வறிய பிள்ளையேயென்றும் தம்நாட்டுக் கல்விமுறை தமக்குச் சகல சலாக்கியங்களையும் தருவதாயிற்று என்றும் கூறிமுடித்தார்கள். சர்வகலாசாலையைப் போதனைக்கு ஆக்குவது பலருக்கு விருப்பமில்லையேயெனினும் அதுபற்றி விவாதிப்பதற்கு இது சமயமல்ல. கூடிய பயனைப் பெறப்பார்ப்பதே எங்கள் கடமை என்று கூறினுர்கள்.

கல்விப்பகுதி மந்திரி கௌரவ டக்றர் C. W. W. கன்னங்கரா அவர்கள் புராணக்கதையொன்றை எடுத்துக்காட்டி வெகு ஹாஸ்யமாகப் பேசினுர்கள். பலகலைக் கழகத்திருந்த ஒரு "தனிவெளி" சுவாமிகளால் நிரப்பப்பட்டது. சுவாமிகளைப்போல அறிவுசான்ற ஒருவரைப் பெறுவதரிது. சுவாமிகளின அறிவுச்சுடரைப் பெறுவதற்கு நலல சந்தர்ப்பம் இழமக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்றும் கூறிமுடித்தார்.

வண. சுவாமி பீற்றர். A. பிள்ளையவர்கள் பேசுகையில இலங்கையின் பொதுமொழி சம்பந்தமாக ஏற்படக்கூடிய சிக்கல்களையும் வித்தியாசங்களையும் தீர்ப்பதற்குச் சுவாமிகளே தகுதவரென்று விளக்கிக் காட்டினுர்கள்.

திரு. T. B. ஜயா, எம். எஸ், சி, அவர்கள் "தகுதிவாய்ந்த ஒருவரைச் சர்வகலாசாலைப் பேராசிரியராகத் தெரிந்துவிட்டார்கள் தமிழுக்கு" என்று கூறிச் சுவாமிகள குணவிசேடங்களையும் வடிவாகச் சித்திரித்தார்கள்.

திரு. S. நடேசன் எம். எஸ், சி, அவர்கள் திரு. கன்னங்கரா அவர்கள் சொல்லிய கதையைத்தழுவி, பார்வதி திருமணக் காட்சியும் கொணர்ந்து ஒரு சாதுரியபுச் செய்தார்கள்; மிகப்பொருத்தமாயிருந்தது. தமிழ்நாட்டு வேந்தர் இமயத்திற் சென்று தம்வெற்றிக்கொடி நாட்டி மீன்வதுபோல் சுவாமிகளும் தம் வெற்றிக்கொடியினை நாட்டிவிட்டு இமயத்தினின்று ஈழம் போந்தார், நாம் அவ்வீரனை உபசரிக்கின்றோம என்று கூறினுர்கள், எல்லோரும் சுவாமிகள் தமது தமிழ்நாட்டின் வெற்றியை நாட்டிருரென்று உணர்ந்துபோலும் கரகோஷம் செய்தார்கள்.

திரு. N. நடராசா K. C. அவர்கள் மட்டக்களப்பில சுவாமிகள் ஆசிரியராகவிருந்த காலந்தொட்டு இந்திய நாட்டிற்குப் பிரிந்துசென்ற காலம் வரையுள்ள வாழ்க்கை வரலாற்றை அழகாகக் கூறினுர்கள். அண்ணுமலைச் சர்வகலாசாலை சென்னைச் சர்வகலாசாலை ஆகிய இடங்களில் சுவாமிகள் புரிந்த தொண்டுகளையும் எடுத்துக் காட்டினுர்கள். முன்னெருகால் சேர். பொன். அருணுசலத்துரையவர்கள் சுவாமிகளைக் கொழும்புச் சர்வகலாசாலை விரிவுரையாளராகும்படி வேண்டியபோது சுவாமிகள் வரமுடியாதிருந்ததையும் எடுத்துக் கூறினுர்கள்.

திரு. M. S. இருவிளங்கமவர்களால் "கொழும்பு மாநகர்த் தமிழன்பர் அளித்த பாராட்டு" வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின், வண்ணை, வை. இராமநாதன், சோம. சரவணபவன் தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை ஆகியோர் இயற்றிய பாக்கள் திரு. T. மாணிக்கவாசகராற் பாடப்பட்டன.

இற்றில் சுவாமிகள் தமது பேச்சில் ஆங்கிலம் பிறநாட்டவருடன் உறவு கொண்டாடுவதற்காக அவசியமே எனினும் இழநாட்டிற் கலைச்செறிவு முதலாய வளங்களுக்குத் தமிழ்அவசியமென்பதை வற்புறுத்திக் கூறினர். தமிழகம் விரும்பி இன்னின்ன செய்யவேண்டும் என்றுகூறி வறிய பிள்ளைகளுக்குக் கலாசாலைக்கல்வி பயிற்றுவிக்க ஒரு நிதி திரட்டவேண்டுமென்றும் சொன்னுர்கள்.

உபசாரணைக்கூட்டம் செவ்வனே நடைபெறுவதற்கு மூலகாரணமாய் நின்றவரும உணவுக் கட்டுப்பாட்டதிகாரியுமான திரு.K. கனகரத்தினமவர்கள் யின்சார்பாக எலலோருக்கும் வந்தனங் கூறிச் சுவாமிகள் கருத்தும் "நிதிசேர்க்கப் பெருமுயற்சி எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினுர்கள். அத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.


# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருனு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 5.8—31.12.43)


## "விமானத் தாக்குதற் காலம் இதுவே"

வங்காள மகாஜனங்களுக்கு எச்சரிக்கை

கல்கத்தா, செப், 21—

இதுதான் விமானத் தாக்குதலுக்குரிய காலம். நீங்கள் வீட்டிலும் உங்கள் காரியாலயத்திலும் விமானத் தாக்குதற் பாதுகாப்பு வசதிகளைச் சரிபார்த்து வைத்திருக்கிறீர்களா?

வங்காள ஏ. ஆர். பி. நிர்வாக சபை வங்காளப் பொதுமக்களுக்கு இந்தக் கேள்வியை அனுப்பியிருக்கிறது.

இந்த எச்சரிக்கை, ஜனங்கள் தற்சமயம் உணவு நிலைமையை மட்டுமே பிரதானமாகக் கருத கூடாதென்பதை ஞாபகமூட்டுகிறது.

---

## தமிழ்ப் பாடற் போட்டி

செட்டி நாட்டு ராஜாவின் பிறந்தினக் கொண்டாட்டத்தை யொட்டி நடைபெற்ற தமிழ்ப் பாடற் போட்டியில் அண்ணுமலைச் சர்வகலாசாலைச் சங்கீதக்கல்லூரி மாணவர் மதியானந்தம் முதலாவதாக வெற்றி பெற்ருர். இவருக்கு மெடல் பரிசளிக்கப்பட்டது. இவர் மதுரையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர்.

## கிரிப்ஸ் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்

ராஜாஜியின் வேண்டுகோள்

சென்னை, செப் 23

சென்றவருடம் ஏப்ரல்மாதத்தில் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட கிரிப்ஸ் திட்டத்தைத் தேசம் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய முயற்சிக்க வேண்டுமென்று திரு. இராஜகோபாலாச்சாரியார் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்.

கிரிப்ஸ் திட்டம் போன்ற திட்டமொன்று இப்பொழுது வழங்கப்பட்டால் நேருஉட்பட்ட காங்கிரஸ் தலைவர்கள் ஜப்பானியருக்கெதிராக நேசநாடுகளுடன் சேர்ந்து ஒத்துழைக்கத் தயாராக இருப்பாரென்று திரு. எட்கார் ஸ்நோ லண்டன் ஹிந்து நிருபரிடங் கூறிய அபிப்பிராயத்தைத் திரு. இராஜகோபாலாச்சாரியார் ஊர்ஜிதஞ் செய்கிறார். ராஜாஜி மேலுங் கூறுவதாவது:

பலங் குறைவாகத் தோன்றும் கட்சியே முதல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அரசியலில் மாற்றமுடியாத சட்டமாகும். பிரிட்டிஷாரே முதல் நடவடிக்கை எடுப்பாரென்று எதிர்பார்ப்பவர் கனவு காண்பவராவர். சிறைக்கு வெளியேயுள்ள இந்தியர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் வெளியிடும் கோரிக்கை ஒதுக்கித் தள்ளப்படக் கூடாதவிதமாக இருக்கவேண்டும் கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கும கிரிப்ஸ் சம்பாஷணைகள் குழம்பியசமயத்திற்பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பூர்வாங்க அரசாங்கத்தைப்பற்றிய நிபந்தனைகளைக் கோருவதற்கும் நாம் தேசத்தைத் தயார் செய்யவேண்டும். அப்படி நாம் செய்யாவிட்டால் 1942ம் வருடத்தில் நாம் இருந்ததைவிட மிகவும் கேவலமான நிலைமையில் யுத்தத்தின்பின் இருக்க நேரிடும்.

ஐக்கியநாடுகள் நிராகரிக்கமுடியாத கோரிக்கையைக் கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் கவனிக்கும்படி நாம் செய்யவேண்டும்.

## சட்டவிரோதமாகக்கூட்டங் கூடித்தாக்கினரா?

ஈவினைவாசிகள் அமவர்மீது வழக்கு

யாழ்ப்பாணம், செப் 23

மல்லாகம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. குணம் ஸ்பென்சர் முன்பாகப் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ஈவினை என்னுமிடத்தில் அவ்வூர் வாசிகளாகிய (1) கே. இளையதம்பி, (2) எஸ். ஆறுமுகம், (3) வி. தர்மலிங்கம், (4) வ. செல்லையா, (5) கே. மாப்பாணி, (6) வ. இராசம்மா, (7) ஜே. சினி முதலியவர்கள்மீது சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்றர் திரு. கே. டி. ரூபன் அவர்களால் சென்ற பங்குனிமாதம் 22-ந் திகதியளவில் சட்ட விரோதமாகக் கூட்டங்கூடி ஆயுதபாணிகளாய் நின்று கந்தையா, நல்லதம்பி, கந்தையா பெண் அருளம்மா, நல்லதம்பி பெண் நல்லம்மா, சுப்பிரமணியம் முதலியோர்களை அடித்துப் பாரதூரமான காயம் உண்டாக்கியதாகவும் சட்ட விரோதமாகக் கந்தையா பெண் அருளம்பாளை ஓர் அறையில் அடைத்து வைத்திருந்ததாகவும் அவர்களுக்குச் சொந்தமான 2000 ரூபா பெறுமதியான நகைகளைப் பலாத்காரமாக அபகரித்ததாகவும் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது கந்தர்மடத்தடி வாசியாகிய கந்தையா பெண் அருளம்மாவும் நல்லதம்பி பெண் நல்லம்மாவும் சாட்சியம் கூறினர்.

வழக்குப் பின்போடப் பட்டிருக்கிறது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் செப் 28

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலைகீதம் † 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி கிட்டப்பா கோட்டுவாத்தியம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 டி எல் வாசுதேவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 டி எல் வாசுதேவன் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 ஆர் விஸ்வநாதன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திரை இசை† 8 மதராஸிலுள்ளபடி மைசூர் வி வெங்கடகிரியப்பா வீணை 9-15 பாத்மிலாப் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உத்சவ சம்பிரதாய கீர்த்தனைகள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் செப் 29

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 ஏ மகமத்தாலுக் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் சுந்தரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜே சாம்ராஜ் புல்லாங்குழல் 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஜே சாம்ராஜ் புல்லாங்குழல 5-45 இசைப் பயிற்சி 6 ஆர் சுந்தரி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35தமிழில் செய்திகள் 7-45 பக்தருப்ப் பாடமாட்டேன் 9 அமெரிக்க வாக்கு 9-15 திருவீழிமிழலை சகோதரர்கள் † 9-20 ஆங்கலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வீணை வயலின் † 10 ஆங்கில நாடகம் 10-30 முடிவு.

### வியாழன் செப் 30

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இரு நாலிசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 என் துந்தாலலிங்கம்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 லக்ஷ்மி வேதம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 லக்ஷ்மி வேதம் பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 என் துந்தாலிங்கம் பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கநர் என் சின்னசாமி ஐயர் வயலின் 9 இன்பத்தின் துன்பம் நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 செட்டுவாழ்க்கையா தர்த்தமா? 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

## மேலதிகமாக ரூ 2½ கோடி வருமானம்

ஆகஸ்ட்மாதத்தில், சகல செலவுகளும் போக, மேலதிகமாக ரூ. 52,91,039 வருமானம் கிடைத்திருப்பதாகப் பொக்கிஷ காரியாலயம் விடுத்த அறிக்கையொன்று கூறுகிறது.

## பசிக் கொடுமையாற் தற்கொலை

கொக்கொட்டை செப் 17—

சிதம்பர கொட்டையில் வெகு நாட்களாகப் பிச்சை வாங்கிச் சீவித்து வந்த ஏறக்குறைய 25 வயதுள்ள ஓர் அநாதஸ்திரீ பட்டினிக் கொடுமையாற் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

## தேகவியோகம்

### இ. சிவப்பிரகாசம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கொல்லன் கலட்டியில் உயர்குடிப்பிறப்பு, கல்வி யறிவொழுக்கம் தெய்வபக்தி செல்வஞ் செல்வாக்கென்னுமிவைகளோடு கூடியவரும் "சினியர்" என அழைக்கப்பட்டு வந்தவருமாகிய ஸ்ரீ இ. சிவப்பிரகாசமவர்கள் சென்ற புதன் கிழமை (22-9-43) பிற்பகல் 4மணிவரையில், தமது மனைவி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் புலம்ப, ஏனைய சுற்றமித்திரர் அயலோர் துயருற இவ்வுலக வாழ்வை யொருவினர். இறக்கும்போது இவருக்கு வயசு 73. மதுபரிபாலனப் பகுதியில் உத்தியோகம் வகித்திருக்கும் திரு. பாலசுப்பிரமணியம், அரசாங்கப் பகுதியில் பிரதம லேககராகக் கடமை பார்த்துஇப்பொழுது இளைப்பாறியிருக்கும் திரு. சுவாமிநாதன், பண்டிதர் சேதுகாவலன், திரு. இளையதம்பி, திரு. சபாநாயகம் என்னுமிவர்கள் இவருடைய புதல்வராவர். இவருக்குப் புதல்விபரும் மூவருளர்; இவருக்குரிய ஈமக்கடன்கள் அடுத்தநாள், திரு. பாலசுப்பிரமணியம், திரு. சுவாமிநாதன், திரு. இளையதம்பியென்னும் மூவராலும் பல சுற்றமித்திரர் அயலவர் சமுகத்தில் விதிப்படி செய்யப்பட்டன.

இவருடைய ஆன்மா சாந்தியடைக.

## தேவை

கல்வியங்காடு ஐக்கிய பண்டகசாலைக்கு ஓர் மானேச்சர் தேவை. ஒரு விற்பனவு காரனை அவரே தெரிய வேண்டும். ரூபாய் 500 ரொக்கப்பிணை. வங்கி வட்டி கொடுபடும். இருவருக்கும் மாசச்சம்பளம் ரூபா 60. 2.10.43 காலை 12 மணிவரை காரியதரிசியால் விண்ணப்பம் ஏற்கப்படும். பிரவேசப்பணம் ரூபா 10. தெரிபடாவிடில் திருப்பிக் கொடுக்கப்படும்.

S. ThambaPillai,
Hony. Treasurer.

கல்வியங்காடு
26—9—43

Mis 128—27-9-43 30-9-43


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)



# அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காசநிராப்பிரகாசம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், பித்தம், நாம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கிழக்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகாம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளறுகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)



குறைந்த விலையில் **துணிகள்** ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42—3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 27, September, 1943